**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஈரோடு**

முன்னிலை : திரு.R.வாஞ்சிநாதன்., B.A.,B.L.,(Hons).,L.L.M.,P.G.D in J.J & J.P

நீதித்துறை நடுவர் எண்.1, ஈரோடு

2026–ம் ஆண்டு மே மாதம் 12–ம் நாள் செவ்வாய்க்கிழமை

(2057 திருவள்ளுவராண்டு, பராபவ வருடம், சித்திரை மாதம் 29–ம் நாள்)

**M.P. No. 31/2026**

**in**

**C.C. No. 112/2015**

A1) சதீஸ்குமார் **(DIED),**
த/பெ. சதாசிவமணி,
பெரியார்நகர், காமராஜர் வீதி,
காளிங்கராயன் பாளையம் அஞ்சல்,
பவானி தாலூக்கா, ஈரோடு.

A2) வினோத்குமார் (வயது 35/2026),
த/பெ. கருப்பன்,
152, சிங்கம்பேட்டை கேட்காலனி,
சிங்கம்பேட்டை அஞ்சல்,
பவானி தாலூக்கா, ஈரோடு.

A3) அலாவுதீன் (வயது 35/2026),
த/பெ. முஸ்தபா,
3/1033–பெருமாள் லைன்,
இந்திராநகர், ஒற்றன் கோவில்,
கள்ளாங்காட்டு காலனி அஞ்சல்,
குமாரபாளையம் தாலூக்கா,
நாமக்கல்.

A4) M.ராம்கி (வயது 37/2026),
த/பெ. முத்துசாமி,
மாரியம்மன்கோவில் வீதி,
90–A சிங்கம்பேட்டை, ஹைஸ்கூல்,
சிங்கம்பேட்டை அஞ்சல்,
பவானி தாலூக்கா, ஈரோடு.

A5) விஜய் (வயது 36/2026),
த/பெ. சித்தன்,
90–கோவில் வீதி, அரிஜன காலனி,
சுந்ராம்பாளையம், ஊமாரெட்டியூர்,
அந்தியூர் தாலூக்கா, ஈரோடு. ... மனுதாரர்கள்/எதிரிகள்

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.05.12 17:26:17 +0530

/எதிர்/

காவல் ஆய்வாளர்,
கருங்கல்பாளையம் காவல் நிலையம்,
ஈரோடு.
குற்ற எண். 320/2013 ... எதிர்மனுதாரர்/புகார்தாரர்

**உத்தரவு**

இம்மனு குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 254(2) ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுவின் சுருக்கம்:**

மனுதாரர் தரப்பில் மனுதாரர்கள்/எதிரிகள் மீது ஈரோடு, கருங்கல்பாளையம் காவல்துறையினரால் இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 406 மற்றும் 420–ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, மேற்படி வழக்கு இந்நீதிமன்றத்தில் நடந்து வருகின்றது என்றும், மேற்படி எதிர்மனுதாரர்/புகார்தாரர், மேற்படி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு, மேற்படி எதிரிகளை இந்த வழக்கில் இல்லாமல் செய்வதற்கு, மேற்படி எதிரிகளின் வீட்டிற்கு சென்று, அவர்களின் பெற்றோர்களிடம் வற்புறுத்தி ரூ.4,44,900/– தொகையினை கேட்டு வாங்கியுள்ளார்கள் என்றும், மேலும் மேற்படி உண்மைதன்மை சேகரிக்க, மேற்படி வழக்கில் உள்ள 4–ம் எதிரியின் தாயார் சம்பூர்ணம் தன்னிடம் வைத்திருந்து சேமிப்பு பணமான ரூ.1,24,000/–கொடுத்துள்ளார் என்றும், எனவே மேற்படி சம்பூர்ணம் என்பவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யா விட்டால் எதிரிகளுக்கு ஈடுசெய்யமுடியாத இழப்பு ஏற்படும் என்றும், ஆகவே சமூகம் நீதிமன்றம் கருணை கூர்ந்து 4–ம் எதிரியின் தாயாரான சம்பூர்ணம் என்பவரை சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) அரசுதரப்பு பதிலுரை :**

இவ்வழக்கில் மேற்படி சாட்சியை விசாரிக்காவிட்டால் மனுதாரரின் வழக்கை நிருபிக்க முடியாது எனக்கூறுவது பொய்யாகும் என்றும், இவ்வழக்கு 2015–ம் ஆண்டு முதல் நிலுவையில் உள்ளது என்றும், தற்போது எதிரி தரப்பின் வாதுரைக்காக வழக்கு வாய்தாவில் உள்ள நிலையில் 4–ம் எதிரியின் தாயாரான சம்பூர்ணம் என்பவரை விசாரிக்க வேண்டும் என்பது வழக்கை காலதாமதம் படுத்தவும், நீதிமன்ற தண்டனைகளிலிருந்து தப்பிப்பதற்காகவும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால்

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.05.12 17:26:22 +0530

இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என அரசு தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

**3) பிரச்சனை:**

இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதே தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

**4) பிரச்சனைக்கான தீர்வு:**

மனுதாரர் தரப்பில் 4-ம் எதிரியின் தாயாரான சம்பூர்ணம் என்பவரை விசாரிக்க அனுமதி கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. எதிர்மனுதாரர்/புகார்தாரர் எதிரிகளின் பெற்றோர்களிடம் இருந்து ரூ.4,44,900/- தொகையினை கேட்டு வாங்கியுள்ளதாகவும், மேலும் 4-ம் எதிரியின் தாயாரான சம்பூர்ணம் என்பவரிடமிருந்து அவருடைய சேமிப்பு தொகையான ரூ.1,24,000/-த்தை பெற்றுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளதால், அதுசம்மந்தமாக 4-ம் எதிரியின் தாயாரான சம்பூர்ணம் என்பவரை சாட்சியாக விசாரிக்க வேண்டியது அவசியமானது என்று மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி மனுவிற்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளபோதும், மனுதாரர்கள் அவர்கள் தரப்பு சாட்சியத்தை முன் நிறுத்தி விசாரிக்கும் பட்சத்தில் தான் வழக்கு பற்றிய உண்மை விவரங்கள் தெரியவரும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மேலே ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையிலும், மனுதாரர் தரப்பு சாட்சியத்தை விசாரிக்க வாய்ப்பு வழங்க வேண்டியது வழக்கிற்கு அவசியமானது என்றே இந்நீதிமன்றம் தீர்மானம் செய்கின்றது.

முடிவாக மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரி செய்யப்பட்டு இன்று, 2026-ம் ஆண்டு மே மாதம் 12-ம் நாள் செவ்வாய்க்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.05.12 17:26:26 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,
ஈரோடு.